# வியாபார வெளிநாட்டு நாணய கணக்கு (BFCA)

**1. தயாரிப்பின் தன்மை**

வெளிநாட்டு நாணய வியாபாரக் கணக்கு.

**2. வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் பயன்கள்**

**2.1** கவர்ச்சிகரமான வட்டி வீதம்

**2.2** புதிய வட்டி வீதத்திற்காகhttps://www.peoples.lk/interst-rates/ இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**2.3** உங்கள் முதலீட்டுக்கு 100% பூரண பாதுகாப்பு

**2.4** உள்வரும் பண அனுப்பல் கட்டணம் இன்றி வெளிநாட்டு நாணய கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**3. தகைமை**

**3.1** இலங்கைக்கு வெளியில் குடியிருப்பவரிடமிருந்து வெளிநாட்டு செலாவணியை ஈட்டுகின்ற இலங்கையில் வதியும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள்.

i. இலங்கையில் வதியும் தனிநபர் ஒருவர்.

ii. தனி நபர் உரிமையாளர் அல்லது பங்காளர்கள் பெரும்பாலானவர்கள் இலங்கையில் குடியிருக்கின்ற இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தனி உரிமை அல்லது பங்குடைமை (இரண்டு பங்காளர்களுடன் பங்குடைமையுள்ள சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சம் ஒரு பங்காளர் இலங்கையில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.)

iii. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி.

iv. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனி.

v. குறித்த அமைச்சின் செயலாளரின் அல்லது தகுந்த அதிகாரசபையின் பரிந்துரையைக் கொண்டுள்ள அரச நிறுவனம்.

vi. வங்கியுடன் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணி வந்த, மரணமடைந்த நபர் ஒருவரின் சொத்துக்களின் நிருவாகி ஒருவர் அல்லது மரணசாதனகாரர் (நிறைவேற்றுனர்), மரணமடைந்தவரின் சொத்துக்களின் நிருவாக நடவடிக்கைகள் முடிவடையும் வரை; மற்றும்

vii. நடவடிக்கைமுறை முடிவடையும் வரை வங்கியுடன் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றைப் பேணிய கம்பனியொன்றின் பெறுநர் அல்லது ஒழிக்குநர் ஒருவர்.

**3.2** அரசசார்பற்ற நிறுவனமொன்றுக்கு வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றைத் (வெ.வி.நா.க) திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 4. கணக்கைத் திறப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைமுறை

**4.1** தனிநபர்களுக்காக, கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம், தேசிய அடையாள அட்டையின் அல்லது கடவுச்சீட்டின் (புகைப்படம், விபரங்கள் மற்றும் மாற்றல்கள் உள்ள பக்கங்களின்) போட்டோ பிரதியொன்று, உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்க மாதிரி படிவம், வெளிநாட்டு கணக்கிற்காக வரி அறவிடுவதை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்தல் மற்றும் வங்கியினால் காலத்திறக்குக் காலம் விதிக்கப்படுகின்ற வேறு எந்தவொரு பத்திரம்.

**4.2** தனிநபர் வியாபாரம், பங்குடைமை வியாபாரம் மற்றும் கம்பனிகள் சம்பந்தமாக கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம் மற்றும் தகுந்தவாறு அடையாளம் காணும் ஆவணங்கள், உங்கள் வாடிக்கையாளாரை அறிந்துகொள்க மாதிரி படிவம், வெளிநாட்டு கணக்கிற்காக வரி அறவிடுவதை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்தல் மற்றும் வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற வேறு எந்தவொரு பத்திரம்.

**4.3** வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றைத் திறப்பதற்கு ஏற்புடையதான வகையில் அவர்களின் தகுதியை உறுதிப்படுத்தும் பத்திரங்கள்.

**4.4** தனிநபர் தொகுதி.

i. பண்டங்களை ஏற்றுமதி செய்கின்றவர்கள் (வர்த்தக பண்டங்கள்).
ii. தொழில் சேவை ஏற்றுமதியாளர்கள்.
iii. இடைதரகர்கள் என்ற வகையில் மீள் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நபர்கள்.
iv. சுற்றுலா முகவர்கள் மற்றும் உல்லாச பயணங்களை செயற்படுத்துபவர்கள்.
v. ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள்.
vi. இரத்தினக் கற்கள் மற்றும் தங்க நகைகள் விற்பனையாளர்கள்.
vii. வெளிநாட்டு தொழில் முகவர்கள்.
viii. இலங்கையில் வர்த்தக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தரவு பெற்ற/அதிகாரம் பெற்ற

வெளிநாட்டு கப்பல்சரக்கு கொண்டு செல்லுகின்றவர்கள் மற்றும் ஏனைய வழங்கல் சேவைகளை வழங்குகின்றவர்கள்.

ix. இலங்கையில் வர்த்தக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தரவு பெற்ற/அதிகாரம் பெற்ற கப்பல் முகவர்கள்.

x. இலங்கை விமான சேவை அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தரவு பெற்ற/அதிகாரம் பெற்ற விற்பனை முகவர்கள்.

xi. சம்பந்தப்பட்ட மத்திய (வரிசை) அமைச்சின் உத்தரவு பெற்ற பங்கர் செயற்பாட்டாளர்கள்.

xii. துறைமுக சுற்றயல் செயற்பாட்டாளர்கள்.

xiii. விமான சேவையில் சுற்றயல் சேவை வழங்குநர்கள்.

xiv. கப்பற் பாதைகள் மற்றும் விமான சேவைகளுக்கு உணவு வழங்குபவர்கள்.

xv. தீர்வையற்ற கடைகள் (வரியற்ற சலுகைகளின் கீழ் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு அனுமதி பெற்ற வியாபாரம் ஒன்றில் ஈடுபடுகிற).

xvi. இலங்கை முதலீட்டுச் சபையின் அல்லது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தேவைகளை மற்றும் /அல்லது பரிந்துரைகளை இணங்கியொழுகி அல்லது தற்காலிக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தயாரிப்புத் திட்டத்தின் (வுஐநுீ) கீழ் பதிவு செய்து கொண்டுள்ள, மற்றும் பண்டங்களை இறக்குமதி செய்து, அவற்றை ஒழுங்குபடுத்தி அத்தகைய பணடங்களை நேரடியாக ஏற்றுமதி செய்கின்றவர்களுக்கு வழங்குகின்றமறைமுக பண்டங்களை ஏற்றுமதி செய்கின்றவர்கள்.

xvii. 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க (திருத்தம் செய்யப்பட்ட) வாணிப நிலைய ஒழுங்குவிதியின், நிதி சட்டத்தின் 2(1) பந்தியின் பிரகாரம் உள்ளூர் சந்தைக்கு பண்டங்களை /உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ள இலங்கையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற தொழில் முனைவாளர்கள்.

**5.** வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றைத் திறப்பதற்காகத் தேவைப்படும் ஆவணங்கள் பற்றிய சரிபார்க்கும் பட்டியல்.

**5.1** ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கு திறக்கும் மாதிரிப் படிவம்

a) தனியுரிமை வியாபார கணக்கொன்றுக்காக கணக்கு திறக்கும் விண்ணப்பப் படிவம் - ஆங்கிலம்.
https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018.pdf

b) வரையறுக்கப்பட்ட கம்பனிக்காக கணக்கு திறக்கும் விண்ணப்பப் படிவம் - ஆங்கிலம்.
https://www.peoplesbank.lk/roastoth/2022/10/235-Eng.pdf

c) தனிநபர் வியாபார கணக்கொன்றுக்காக கணக்கு திறக்கும் விண்ணப்பப் படிவம் - ஆங்கிலம்.
https://www.peoplesbank.lk/roastoth/2023/10/232-SolProprietorship_english.pdf

d) பங்குடைமை வியாபார கணக்கொன்றுக்காக கணக்கு திறக்கும் விண்ணப்பப் படிவம் - ஆங்கிலம்.
https://www.peoplesbank.lk/roastoth/2023/10/229-SolProprietorship_english.pdf

**5.2** அனைத்து அதிகாரம் பெற்ற கையொப்பமிடுநர்களின் கையொப்ப அட்டைகள் (கம்பனி செயலாளர்/குறித்த அதிகாரசபையினால் சான்றுப்படுத்தப்பட்டது)

**5.3** அனைத்து பணிப்பாளர்களின் மற்றும் அதிகாரம் பெற்ற கையொப்பமிடுநர்களின் தனித் தனியாகப் பெற்றுக் கொண்ட உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்க (KYC) மாதிரி படிவம் மற்றும் வெளிநாட்டு கணக்கிற்காக வரி அறவிடுவதை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்தல். (FATCA)

**5.4** அனைத்து பணிப்பாளர்களின் மற்றும் அதிகாரம் பெற்ற கையொப்பமிடுநர்களின்/தனிஉரிமையாளர்களின்/ பங்குடைமையாளர்களின் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களின் அல்லது தேசிய அடையாள அட்டைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்.

**5.5** அனைத்து பங்குடையோர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பயன் பெறும் உரிமையாளர். மாதிரிப்படிவங்கள். (வரையறுக்கப்பட்ட கம்பனிக்காக ஏற்புடையதாகும்.)

**5.6** மின் கணக்கு கூற்றுக்கான விண்ணப்பப் படிவம். (E-Statement)

**5.7** நட்டஈட்டுக் கடிதம் (தேவைப்பட்டால்)

**5.8** கம்பனி செயலாளரால் சான்றுப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழின் பிரதி/ தனிநபர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி /பங்குடைமை வியாபாரத்தைப் பதிவு செய்யும் சான்றிதழின் பிரதி.

**5.9** பணிப்பாளர்களின்/ அதிகாரம் பெற்ற கையொப்பம் இடுபவர்களின் பெயர்ப் பட்டியல், அவர்களின் கையொப்பங்களுடன். (கம்பனி கடிதத் தலைப்பில் பெற்றுக் கொண்டது).

**5.10** செயல்முறை விதிகளின் பிரதி, மா.ப.01 அல்லது 20, மா.ப.15 (வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு ஏற்புடையதாகும்)

**5.11** கம்பனி கடிதத் தலைப்பின் மீது குறிப்பிடப்பட்ட அதன் பணிப்பாளர் சபை தீர்மானம் (வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் கம்பனிக்கு ஏற்புடையதாகும்)

a) மக்கள் வங்கியின் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவையில் /குறித்த கிளையில் கணக்கொன்றைத் திறத்தல்.
b) வியாபார வெளிநாட்டு நாணய கணக்கின் செயற்பாட்டு அறிவுறுத்தல்கள்.
c) மின் கணக்கு கூற்று வசதிக்காக அதிகாரம் பெற்ற மின்னஞ்சல் முகவரி.
d) அற்றோனி தத்துவத்தின் விபரம் (இருப்பின்)

**5.12** மேலுள்ள தனிநபர் தொகுதிக்கு அமைவாக வெளிநாட்டு செலாவணி வியாபாரத்தை மெய்யுறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய சாட்சி ஆவணம்.

**e) தேவையான குறைந்தபட்ச மீதி**

| **வெளிநாட்டு நாணயம்** | **சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கு** | **நிலையான வைப்புக் கணக்கு** |
|---|---|---|
| அமெ.டொ. | 100/- | 1000/- |
| பிரி.பவுண் | 100/- | 750/- |
| யூரோ | 100/- | 1000/- |
| அவுஸ்.டொலர் | 150/- | 1350/- |
| கனே.டொலர் | 150/- | 1300/- |
| சிங்.டொலர் | 150/- | 1500/- |
| ஜப்பான் யென் | 12,000/- | 110,000/- |
| ஹொங்.டொலர் | 800/- | 8000/- |
| நியுசீ.டொலர் | 150/- | 1500/- |
| சுவிஸ் பிரேங் | 100/- | 1000/- |
| சுவீடி.குறோனர் | 900/- | 9000/- |
| டெனி.குறோனர் | 700/- | 6500/- |
| நோவி.குறோனர் | 900/- | 8750/- |
| சீன யுவான் | 700/- | 6750/- |
| தாய் பஹாட் | 3300/- | 33,000/- |

| | | |
|---|---|---|
| இந்திய ரூபாய் | 8000/- | 80,000/- |

a) ஆரம்ப வைப்புத் தொகையொன்று இல்லாமல் வியாபார வெளிநாட்டு நாணய சேமிப்பு/ நடைமுறைக் கணக்கொன்றைத் திறக்க முடியும்.

b) 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு எவ்வித செயற்பாடும் இல்லாத கணக்குகள், செயற்படா கணக்கு வகைக்கு மாற்றப்படும்.

c) ஒரு வருடத்திற்கு மேல் வெற்று மீதியைக் கொண்டுள்ள கணக்குகள் தானியங்கியாக மூடப்படும்.

## 7. பொது

7.1 வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றை சேமிப்பு, நடைமுறை (காசோலை எழுதிக் கொடுக்கும் வசதிகள் இல்லாமல்) அல்லது நிலையான வைப்பாக எந்தவொரு பயன்பாட்டில் உள்ள வெளிநாட்டு நாணய வகையில் திறந்து பேண முடியும். அதவது: அமெ.டொ., பிரி.பவுண், யூரோ, அவுஸ்திரேலிய டொலர், கனேடிய டொலர், ஹொங்கொங் டொலர், சிங்கப்பூர் டொலர், ஜப்பான் யென், சுவீடி' குறோனர், நியுசீலாந்து டொலர், டென்மார்க் குறோனர், நோர்வேஜியன் குறோனர், சைனிஸ் யுவான், சுவிஸ் பிரேங், தாய் பாத் மற்றும் இந்திய ரூபாய்.

7.2 இலங்கைக்கு வெளியில் குடியிருக்கின்ற ஒரு நபர் வெளிநாட்டு வருமானம் ஈட்டல் சம்பந்தமாக, வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றைப் பேணுவதற்கு, விண்ணப்பதாரரின் தகுதியைத் தீர்மானிப்பதற்காக வியாபார வெளிநாட்டு நாணய கணக்கைத் திறக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த அதிகாரி/அதிகாரிகள் அனுமதி வழங்குவது உள்ளிட்ட ஆவண ரீதியான சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7.3 2021.03.18ஆம் திகதியிட்ட 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி ஏற்பாடுகளின் கீழ் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கு உரிமையாளர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேலதிகபற்று வசதிகளைத் தவிர்த்து வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றை மேலதிகபற்றுக்கு உள்ளாக்குதல் ஆகாது.

7.4 முறையே, இலங்கை வர்த்தக கப்பல் பணிப்பாளர் நாயகம் அல்லது சிவில் விமான சேவை அதிகாரசபையின் பணிப்பளர் நாயகத்தினால் உத்தரவு பெற்ற கணக்கு உரிமையாளர் கப்பல் முகவராக அல்லது சாதாரண விற்பனை முகவராகின்றபோது (சா.வி.மு) உள்நாட்டு கட்டணம் அல்லது பண்டங்களைக் கொண்டு செல்லும் பிரிவாக அல்லாத கட்டணம் என்ற வகையில் சேகரிக்கின்ற கட்டணங்கள் மற்றும் வைப்புகள் என்பவற்றை வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் வரவு வைத்தலாகாது.

7.5 எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை ரூபாவை வெளிநாட்டு நாணயமாக மாற்றி வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் வரவு வைத்தலாகாது.

## 8. அனுமதி பெற்ற வரவு

**8.1** பண்டங்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி, மீள் ஏற்றுமதி வர்த்தகம், கணக்கு உரிமையாளரால் எடுக்கப்படுகின்ற வெளிநாட்டு கருத்திட்டங்கள் மற்றும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவருக்கு உள்நாட்டு ரீதியாக வழங்கப்படுகின்ற பண்டங்கள் மற்றும் சேவைகள் சம்பந்தமாக வங்கி முறைமை ஊடாக வெளிநாட்டு செலாவணி என்ற முறையில் வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் பண அனுப்பல்.

8.2 இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரால் வழங்கப்படுகின்ற பண்டங்கள் மற்றும் சேவைகள் சம்பந்தமாக இலங்கையில் கணக்கு உரிமையாளர் மீளப் பெற்றுக் கொண்ட வெளிநாட்டு செலாவணி.

8.3 வெளிநாட்டு செலாவணி தொகை அமெ.டொலர் 15,000/- அல்லது அதற்கு சம வீதத்திலான வேறு வெளிநாட்டு நாணய வகையை விஞ்சுகின்றபோது, சுங்கத் திணைக்களத்திற்கு முன்வைக்கின்ற கூற்றின் மீது அல்லது அத்தகைய செலாவணி அமெ.டொலர் 15,000/- இற்கு சமமாக அல்லது குறைகின்ற வேறு வெளிநாட்டு நாணய வகையாக இருக்கின்றபோது வங்கிக்கு தகுந்த வெளிப்படுத்தலின் மீது கணக்கு உரிமையாளரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு செலாவணி.

8.4 ஒரே கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து, வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிலிருந்து (வெ.நா.வ.அ.க) மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

8.5 நடப்பு பரிவர்த்தனைக்கு உரியதாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரின் வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிலிருந்து (வெ.நா.வ.அ.க) மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

8.6 கணக்கு உரிமையாளர் உள்நாட்டு கப்பல்/விமான கம்பனியாக இருக்கும்போதுÉ வெளிநாடுகளில் சேவை செய்கின்ற இலங்கை பிரசை ஒருவரின் (ஊழியர் ஒருவரின்) தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து மேற்கொள்ளும் பண மாற்றல், கணக்கு உரிமையாளருக்கு உரித்தான கப்பல்/விமானங்களின் பணியாட் தொகுதியினரின் சம்பளம்/ஊதியம் மற்றும் அத்தகைய ஊழியரின் செலுத்துவதற்கு உரிய ஏனைய சம்பந்தப்பட்ட செலுத்தீடுகள்É

**8.7** பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குவது சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரின் வெளிநாட்டு சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்காக இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (DFCA) மாற்றுதல்.

8.8 கணக்கு உரிமையாளர் இலங்கையில் கப்பற் சரக்கு ஏற்றும் முகவராக அல்லது விற்பனை முகவராக இருந்தால்É குறித்த முகவர் நிறுவன உடன்படிக்கைகளின் கீழ், அப் பணிக்காக வெளிநாட்டு

முகவரிடமிருந்து அல்லது அவர் சார்பில் பெயர்க் குறிப்பிடப்பட்ட மூன்றாம் தரப்பிலிருந்து வங்கி முறைமை ஊடாக வெளிநாட்டு செலாவணி என்ற வகையில் கிடைக்கும் பண அனுப்பல்.

8.9 கணக்கு உரிமையாளர் இலங்கையில் கப்பற் சரக்கு ஏற்றும் முகவராக அல்லது விற்பனை முகவராக இருந்தால்; வெளிநாட்டு முகவரின் சார்பாக முகவரால் வெளிநாட்டு செலாவணி என்ற வகையில் சேகரிக்கப்பட்ட பண்டங்களைக் கொண்டு செல்லும் கட்டணங்கள் மற்றும் பயணிகள் கட்டணங்கள் என்பவற்றை இலங்கையில் வங்கி மாற்றல் மூலம் அல்லது, வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றுக்கு அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் பேணப்படுகின்ற கணக்கொன்றுக்கு எதிராக வங்கியினால் வழங்கப்பட்ட வங்கி வரைவு மூலம்.

8.10 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் சேவை வழங்குகின்ற இலங்கை பிரசைகளுக்கு ஊதியம் மற்றும்/அல்லது உழைப்பை வழங்குவதற்காக வெளிநாட்டு சேவை வழங்குநருடன் செயலாற்றியுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனியாக இருப்பின்É குறித்த வெளிநாட்டு சேவை வழங்குநரிடமிருந்து வங்கி முறைமை ஊடாக வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு செலாவணி என்ற வகையில் கிடைக்கும் பண அனுப்பல் அல்லது அத்தகைய சேவை வழங்குநரின் வெளிநாட்டு வங்கி அலகில் பேணப்படுகின்ற கணக்கிலிருந்து மாற்றுதல்;.

8.11 இலங்கை துறைமுகத்தின் ஊடாக அல்லது விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு வருகை தருகின்ற அல்லது புறப்பட்டுச் செல்லுகின்ற பயணிகளுக்கு (வதிவிட நிலையைப் பொருட்படுத்தாமல்) வழங்குகின்ற பண்டங்கள் அல்லது சேவைகளைக் கவனத்திற் கொண்டு தீர்வையற்ற சலுகையின் கீழ், அனுமதி பெற்ற வியாபாரங்களை நடாத்துகின்ற கணக்கு உரிமையாளருக்கு வெளிநாட்டு செலாவணி என்ற வகையில் கிடைக்கும் செலுத்தீடுகள்;

8.12 வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் பற்று வைத்து பெற்றுக் கொண்டுள்ளபோது கணக்கு உரிமையாளரின் ஏதேனும் வெளிநாட்டு சொத்துக்களிலிருந்து ஈட்டும் ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வருமானம்;

8.13 அந்தக் கணக்கு உரிமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் பற்று வைத்து அல்லது அவருடைய வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிற்கு மாற்றிய நிதியங்களின் பங்களிப்புக்கு விகிதாசார ரீதியில் பயன்படுத்துவதன் மூலம் வெளி முதலீடுகளிலிருந்து கிடைக்கும் ஏனும் வருமானம் அல்லது மூலதன வருமானத்தை வெளிச் செல்லும் முதலீட்டுக் கணக்கிலிருந்து மாற்றுதல்;

8.14 கணக்கு உரிமையாளரின் அந்த வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் பற்று வைப்பதன் மூலம் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கும்போது, வேறு நபர் ஒருவடைய (அதாவது

கொள்வனவாளரின்) வெளிச் செல்லும் முதலீட்டுக் கணக்கிலிருந்து அனுமதி பெற்ற வெளிநாட்டு முதலீடு ஒன்று அத்தகைய கொள்வனவாளர் ஒருவருக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பண மாற்றல்.

8.15 கணக்கு உரிமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் பற்று வைப்பதன் மூலம் இலங்கை அபிவிருத்தி முறிகளில் ஆரம்ப முதலீடு செய்யப்பட்டிருந்தால், இலங்கை அபிவிருத்தி முறிகளில் (இல.அபி.முறி) வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைக்கும் கூப்பன் வருமானம் விற்பனை /முதிர்வடையும் வருமானம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பெறுகைகள்.

8.16 அனுமதி பெற்ற பற்று வைத்தலின் கீழ் 5, 6, மற்றும் 7 ஆகிய விடயங்களுக்கு அமைவாக வியாபார வெளிநாட்டு நாணய கணக்கில் பற்று வைத்து கணக்கு உரிமையாளர் பெற்றுக்கொண்ட பணத்தில் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத வெளிநாட்டு நாணயம்.

8.17 கணக்கு உரிமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து அத்தகைய வெளிநாட்டு பயண அட்டைக்காக நிதியம் வழங்கப்பட்டுள்ள பணம் வரை அவருடைய வெளிநாட்டு பயண அட்டையில் (வெ.ப.அ) எஞ்சியுள்ள பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத மீதி.

8.18 கணக்கு உரிமையாளர் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவினால் (இல.கா.ஒ.ஆ) ஒழுங்குமுறைப்படுத்துகின்ற காப்புறுதி கம்பனியாக இருக்கும்போது, தகைமை பெற்ற நுகர்வோருக்கு மற்றும் இணை-காப்புறுதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணயங்களில் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்களின் மீது கிடைக்கும் காப்புறுதி தவணைப் பணம் மற்றும் மீண்டும் காப்புறுதி செய்கின்றவர்களின் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை (தே.கா.ந.நி) நிதியத்திலிருந்து கிடைக்கும் உரித்துகள்.

8.19 கணக்கு உரிமையாளர் தொழில்தருநராக இருக்கும்போதுÉ சம்பளம், தொழில் மற்றும் ஓய்வூதிய பயன்களை மேலதிகமாகச் செலுத்துதல் அல்லது அத்தகைய ஊழியரிடமிருந்து செலுத்த வேண்டிய ஏனைய செலுத்தீட்டுக்காக இலங்கையில் சேவையில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு அல்லது இரட்டை பிரசாவுரிமை உள்ள நபரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கொன்றிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

8.20 கணக்கு உரிமையாளர் சொத்துக்களின் அபிவிருத்தியாளராக இருக்கும்போது; இலங்கைக்கு வெளியில் வதியும் நபர் ஒருவரின் (அதாவது முதலீட்டாளரின்) உள்வரும் முதலீட்டு கணக்கிலிருந்து (உ.மு.க) அசையா சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் அந்த முதலீட்டாளருக்குக் கிடைக்கும் செலுத்தீடு.

8.21 கணக்கு உரிமையாளர் சொத்துக்களின் அபிவிருத்தியாளராக இருக்கும்போது 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அறிவுறுத்தல்கள் மூலம் அனுமதி

அளிக்கப்பட்டுள்ளபடி, வேறொரு நாட்டில் நிரந்தர வதிவுக்காக விசா அனுமதிப்பத்திரத்தின் மீது இலங்கைக்கு வெளியில் வதியும் இலங்கையர் ஒருவரிடமிருந்து இரட்டை பிரசாவுரிமை உள்ளவரிடமிருந்து கிடைத்த செலுத்தீட்டின் மீது வெளிநாட்டு கடன் தொகை கணக்கிலிருந்து (வெ.க.தொ.க) பண மாற்றலை மேற்கொள்ளுதல்.

8.22 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் 8(3) பிரிவு பிரகாரம் இலங்கைக்கு வெளியில் கணக்கு உரிமையாளரிடமிருந்து ஆரம்பிக்கப்படுகின்ற பணம் அனுப்பல்.

8.23 மேலே பட்டியல்படுத்தப்பட்டுள்ள தனிநபர் தொகுதியின் கீழ் இருக்கின்ற நபராக இருக்கும் கணக்கு உரிமையாளர், பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவது சம்பந்தமாக வேறு வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகளிலிருந்து அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் பேணப்படுகின்ற கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

8.24 கணக்கில் இருந்த பணத்தின் மீது வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டிக் கொண்ட வட்டி.

8.25 கணக்கு உரிமையாளர் உள்நாட்டு கல்வி நிறுவனமாக இருக்கின்றபோது; வெளிநாடு களில்சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் தனிநபர் வெளிநாடடு நாணய கணக்குகளிலிருந்து (வெளிநாட்டவர்களைத் தவிர்த்து) மேற்கொள்ளப்படும் பண மாற்றல், பாடநெறிகள் அல்லது கற்கை நடவடிக்கைகளுக்காகப் பதிவு செய்துள்ள அவர்களின் நெருங்கிய குடும்ப அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட மேலதிக பயிற்சி வகுப்பு கட்டணங்கள்.

8.26 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளை இணங்கியொழுகி கொழும்பு துறைமுக நகர மற்றும் அதிகார பிரதேசங்களில் வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு அனுமதி பெற்ற நபர் ஒருவரின் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதி அட்டவணையில் 2வது பந்தியில் (3)ஆம் உப பந்தி பிரகாரம், வியாபார வெளிநாட்டு நாணய கணக்கொன்றைத் திறப்பதற்கு மற்றும் பேணுவதற்கு தகைமையுள்ள கணக்கு உரிமையாளருக்கு கிடைக்கும் வெளிநாட்டு செலாவணி உழைப்பு/ செலுத்தீடு.

## 9. அனுமதி பெற்ற பற்று

9.1 கணக்கு உரிமையாளரின் நடைமுறை மாற்றலுக்காக மூலதன மாற்றல் சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு வெளிச் செல்லும் பண அனுப்பல்.

9.2 இலங்கையில், இலங்கை ரூபாவில் பணம் பெற்றுக்கொள்ளுதல்.

9.3 தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு, வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு அல்லது அந்த கணக்கு உரிமையாளரின் வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிற்கு மேற்கொள்ளப்படும் மாற்றல்.

9.4 நடப்பு பரிவர்த்தனைக்கு உரியதாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரின் வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிற்கு மாற்றுதல்.

9.5 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் 5000/- வரை வெளிநாட்டு நாணயத்தை (அல்லது அதற்கு சமமாக எந்தவொரு பண வகை) வெளிநாட்டு நாணய தாள்களில் மீளப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது சுற்றுலா தேவைகளுக்காக வெளிநாட்டு பயண அட்டையை மேற்கொணர்வதற்காக பணம் மாற்றுதல்.

9.6 தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையிலிருந்து பெற்றுக் கொண்ட உறுதிப்படுத்தலின் மீது, பட்டைதீட்டப்பட்ட அல்லது பட்டைதீட்டப்படாத இரத்தினக் கற்கள் மற்றும் ஏனைய மூலப்பொருட்களை வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்வதற்காக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் வியாபாரிகளினால் விற்பனையாளர்களினால் ஒரு முறைக்கு அமெ.டொல. 50,000/- (அல்லது அதற்கு சமமான வேறு எந்தவொரு பண வகை) வரை வெளிநாட்டு நாணய தாள்களை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

9.7 கணக்கு உரிமையாளர் இலங்கையில் சாதாரண விற்பனை முகவராக அல்லது கப்பற் சரக்கேற்றும் முகவராக இருக்கும்போதுÉ வெளிநாட்டு தலைவரின் அல்லது அவர் சார்பில் பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாம் தரப்பிலிருந்து கிடைக்கின்ற உள்வரும் பண அனுப்பல்களுக்கு எதிராக, வங்கி ஏற்றுக்கொள்ளக் கூடிய கோரிக்கையின் மீது "Cash-to-Masters" என்ற வகையில் ஓர் அழைப்புக்காக ஒரு கப்பலுக்கு அமெ.டொல. 50,000/- (அல்லது அதற்கு சமமான வேறு எந்தவொரு பண வகை) வரை வெளிநாட்டு நாணய தாள்களை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

9.8 வெளிநாடுகளில் கடன் வழங்குபவர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட வெளிநாட்டு நாணய கடனை மீளச் செலுத்தும் / சேவைக்காக அக் கணக்கு உரிமையாளரின் (அதாவது கடன் பெறுநரின்) வர்த்தக கடன் பெறும் கணக்கிற்கு மாற்றுதல்.

9.9 கடன் சேவை செலவுகள் மற்றும் கடன் தருநரால் வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட வெளிநாட்டு நாணய தொகையை மீளச் செலுத்துவது உட்பட வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு பணத்தை மாற்றுதல்.

9.10 2017 நவம்பர் 20ஆம் திகதி முதல் கணக்கு உரிமையாளர் (அதாவது கடன் பெறுநர்) அறிவுறுத்தல் வழங்கும் திகதி

வரையிலான காலத்தில் அத்தகைய கடன் வழங்குபவரிடமிருந்து பெற்றுக் கொண்ட வெளிநாட்டு நாணய கடனை மீளச் செலுத்தியதன் காரணமாக வெளிநாட்டில் கடன் வழங்குபவரின் உள்வரும் முதலீட்டு கணக்கிற்கு மாற்றுதல்.

9.11 கணக்கு உரிமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கின் நிதியத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதற்காக மேறகொள்ளப்படும் மாற்றல்.

9.12 விற்பனையாளர் அந்த வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கின் ஊடாக வெளிநாடுகளில் அனுமதி பெற்ற முதலீடு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட, வேறொரு நபரின் (அதாவது விற்பனையாளரின், வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கில் இடம்பெறும் மாற்றல்.

9.13 கணக்கு உரிமையாளர், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனியாக இருந்தால்É உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மீள்-காப்புறுதியாளர்களுக்கு மற்றும் தேசிய காப்புறுதிக்குப் பொறுப்பான நிதியம் மற்றும் தரகு கட்டணம் என்பவற்றிற்காக வெளிநாட்டு நாணயத்தில் பெயர்க் குறிப்பிடப்பட்ட காப்புறுதி தவணைப் பணம் சம்பந்தமாக தகைமை பெற்ற வாடிக்கையாளர்களுக்கு மற்றும் இணை-காப்புறுதியாளர்களுக்கு உரித்துகளைச் செலுத்துதல்.

9.14 கணக்கு உரிமையாளர் முதலீட்டாளராக, வாடகை வீட்டில் குடியிருப்பவராக அல்லது கொள்வனவாளராக இருக்கும்போதுÉ உள்வரும் முதலீட்டு கணக்குகளுக்கு ஏற்புடையதான வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளபடி, முதலீட்டு கணக்கின், அத்தகைய உரிமையாளரின் இலங்கையில் மூலதன மாற்றலுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வருமானத்தைச் செலுத்துவதான உள்வரும் முதலீட்டு கணக்கிற்கு மாற்றுதல்.

9.15 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் சேவை வழங்குகின்ற இலங்கை பிரசைகளுக்கு சம்பளம் மற்றும்/அல்லது உழைப்பை வழங்குவதற்காக வெளிநாட்டு தொழில் தருநருடன் செயலாற்றியுள்ள, இலங்கையில் கூட்டிணக்கப்பட்ட கம்பனியாக இருக்கும்போது, குறித்த ஊழியர்களின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு அல்லது இலங்கை ரூபாய் கணக்கிற்கு மாற்றுதல்.

9.16 கணக்கு உரிமையாளர் உள்நாட்டு கப்பற் சரக்கேற்றும் / விமான கம்பனியாக இருக்கும்போது/ அத்தகைய கப்பல்களில் / விமானங்களில் வெளிநாடுகளில் சேவை செய்கின்ற இலங்கை பிரசைகளின் தனிநபர் வெளிநாட்டு கணக்குகளுக்கு, பணியாட் தொகுதியினரின் சம்பளம்Æ ஊதியம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தொழில் பயன்களைச் செலுத்துதல்.

9.17 தனிநபர் தொகுதியின் கீழ் ''மேலே பட்டியற்படுத்தப்பட்டுள்ள'' தனிநபர் தொகுதியான கணக்கு உரிமையாளர் பண்டங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தமாக வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிற்கு அல்லது ஏனைய வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற மாற்றல்.

9.18 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின் பிரகாரம் அத்தகைய நிதியங்களை இலங்கைக்கு அனுப்பியுள்ள நபர் என்ற வகையில் கணக்கு உரிமையாளரின் எந்தவொரு பணிக்கான வெளிச் செல்லும் பண அனுப்பல்.

9.19 2021 ஜுலை 30ஆம் திகதியிட்ட இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாடுகள் தொடரின் 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க அறிவுறுத்தல்களுக்கு அமைவாக திறக்கப்பட்ட விசேட வெளிநாட்டு நாணய கணக்கிற்கு (வெ.நா.க) வெளிநாட்டு செலாவணி உழைப்பை மாற்றுதல் மற்றும் கணக்கு உரிமையாளர், ஒழுங்குவிதிகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள படி கொழும்பு பங்குச் சந்தையில் பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள பங்குகள் அல்லது கடன் பிணைப்பொறுப்புகள் சம்பந்தமாக, தகைமை பெற்ற முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு வருமானத்தை அல்லது முதிர்வடையும் வருமானத்தைச் செலுத்துவதற்காக.

**10. கடடணம் மற்றும் அறவீடு**

விகிதாசார மற்றும் வரி அறவிடலுக்காக கீழுள்ள இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

https://www.peoplesbank.lk/roastoth/2024/10/Foreign-English.pdf